<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No.128/2021</u>

<u>வழக்கு சாட்சி PW-1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நடராஜன் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | முத்தையா | தொழில் | : | இரும்புக்கடை |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் இரும்புக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இறந்து போன எதிரி டேனியலை எனக்கு தெரியும். 29.10.2016 ம் தேதி, மாலை 03.00 மணிக்கு ஆழ்வார்க்குறிச்சி கோவிலுக்கு செல்வதற்காக நானும், மணிகண்டனும், சதீஷ் என்ற சுந்தரமாணிக்கமும் என் கடையில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம்.

திருநாவுக்கரசர் மகன் பாபு என்பவர் என் அண்ணன் சுப்பிரமணியத்தை எங்கே என்று கேட்டார். நான் என் அண்ணன் கடையை என்னிடம் கொடுத்து விட்டு, வெளியூருக்கு வேலைக்கு சென்று விட்டதாக சொன்னேன். அப்போது எதிரி பாபு எனக்கு தரவேண்டிய பணத்தை உன் அண்ணன் தராமல் சென்று விட்டார். நீ தான் எனக்கு தரவேண்டும் என்று சொல்லியும், தேவடியா மவனே என்று அசிங்கமாகவும் பேசி, கடைக்கு வெளியே நின்று கொண்டிருந்த அவர்களது நண்பர்களான பெர்வின், சொர்ணம், டேனியல் ஆகியோர்கள் சேர்ந்து என் கையை

பிடித்து வெளியே தள்ளி, எனது இடது, வலது தோள்பட்டைகளில் மிதித்தார்கள். உன் அண்ணன் தான் இந்த கடையை நடத்தினார். நீ நடத்துகிறாய் என்று பொய்யா சொல்லுகிறாய் என்று சொல்லி, இத்தோடு செத்து போ, என்று சொல்லி இடது பக்க முன் தலையில் செங்கலை கொண்டு அடித்தார்கள். நான் வலி தாங்க முடியாமல் சத்தம் போட்டேன்.

மறுபடியும் செங்கலை கொண்டு பாபு எறிந்தார். அது எனது இடது பக்க தோள்பட்டையில் பட்டது. நான் விலகாமல் இருந்திருந்தால் என் தலையில் பட்டு எனது உயிர் போயிருக்கும். என்னுடன் இருந்த நண்பர்கள் சத்தம் போடவும், எதிரிகள் என்றைக்கானாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் செய்து விட்டு சென்றார்கள்.

பின்னர், எனது நண்பர்கள் என்னை தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். என்னை மருத்துவமனையில் சேர்த்து விட்டு எனது அண்ணன் குமாருக்கு தகவல் சொன்னார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை கொடுத்து விட்டு, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு வந்த தென்காசி போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான்.அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். அதிலுள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து எனது அண்ணனுடையதாகும்.

என்னிடம் காண்பிக்கப்படும் செங்கல் எதிரி என்னை தாக்கப் பயன்படுத்தியது தான். அந்த செங்கல் **சா.பொ.1** ஆகும். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

__1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை__ -

நான் தற்போது தென்காசி ஒப்பனை பிள்ளையார் கோவில் தெருவில் பழைய இரும்புக்கடை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர். ஒருவர் பெயர் குமார். மற்றொருவர் பெயர் சுப்பிரமணியன். அவர்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் தென்காசியில் வசித்து வந்தார்கள். பழைய இரும்புக்கடையை எனக்கு முன்னால் எனது அண்ணன் சுப்பிரமணியன் 10 வருடமாக நடத்தி வந்தார். அந்த கடைக்கான உரிமம் சுப்பிரமணியன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த லைசென்ஸை நான் ஆய்வாளர் விசாரணையில் கொடுக்கவில்லை.

எனது அண்ணன் சுப்பிரமணியன் பல பேரிடம் கடன் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பு அந்த கடையை என்னிடம் ஒப்படைத்து விட்டார். லைசென்ஸ் என் பேரில் வாங்கினேனா? என்றால் இல்லை. என்னுடைய அண்ணன் வியாபாரம் நடத்த முடியாததினால் என்னிடம் ஒப்படைத்தார். என்னுடைய அண்ணன் சுப்பிரமணியன் பழக்கடை நடத்தி வந்தார் என்றால் கொரோனா காலக்கட்டத்திற்கு பிறகு தான் பழக்கடை நடத்தினார். அதற்கு முன்பு வேலைக்கு சென்று கொண்டிருந்தார். சம்பவத்திற்கு முன்பு யாராவது என் அண்ணன் கடன் கொடுக்கவேண்டியுள்ளது என்று வந்து கேட்டார்களா? என்றால் இல்லை.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து 50 அடி தூரத்தில் வடக்கு பக்கம் இந்து முன்னனி பிரமுகர் குமார்பாண்டியன் கொலை செய்யப்பட்டார் என்றால் சரிதான். அந்த இடத்தில் ரம்ஜான், பக்ரீத், மொகரம், பொங்கல், தீபாவளி, தேவர் ஜெயந்தி, டிசம்பர்-6 ஆகிய தினங்களில் போலீஸ் பந்தோபஸ்து ஒரு வாரத்திற்கு முன்னால் போட்டிருப்பார்கள் என்றால் சரிதான். நான் இந்து முன்னனி பிரமுகர் என்றால் சரியல்ல. நான் உறுப்பினராக உள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய தினம் தீபாவளி பண்டிகை என்றால் சரிதான். மறுநாள் தேவர் ஜெயந்தி என்றால் எனக்கு தெரியாது. நான் சத்தம்போட்டபோது, போலீஸ் பந்தோபஸ்தில் இருந்த போலீசார் அங்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. எப்போது போலீசார் வந்தார்கள் என்றால் மருத்துவமனைக்கு வந்தார்கள்.

சம்பவம் நடந்தபோது, நிறைய ஆட்கள் கூடினார்களா? என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு தென்புறத்தில் ஜேம்ஸ் நிர்மல்ராஜ் வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகில் முத்து கிருஷ்ணனின் வீடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் கடைக்கு வடபுறம் நியூ ஸ்டோர் என்ற கடை உள்ளது என்றால் சரிதான். அதனை ஒரு முஸ்லீம் நபர் நடத்தி வந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது, அந்த கடையில் ஆட்கள் கூடியிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த பிறகு அங்கு பக்கத்தில் இருந்த நபர்கள் வந்து பார்த்தார்களா? என்றால் பார்த்தார்கள். இந்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொன்னேனா? என்றால் சொன்னேன்.என்னுடைய அண்ணன் குமார் சம்பவயிடத்திற்கு வரவில்லை. மருத்துவமனைக்கு வந்தார்.

என்னை தனியார் மருத்துவமனைக்கு சம்பவம் நடந்தவுடன் நண்பர்களும், அருகில் நின்றவர்களும் அழைத்து சென்றார்களா? என்றால் தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று சொன்னார்கள். அங்கு முதலுதவி அளித்தார்களா? என்றால் இல்லை. இந்த விபரத்தை நான் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா? என்றால் இல்லை. அதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா? என்றால் அங்கு சிகிச்சை எடுக்காத காரணத்தினால் சொல்லவில்லை. நான் தங்கபாண்டியன் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றாலும், அது பற்றிய விபரத்தை ஆய்வாளரிடம் சொன்னால் உண்மை தெரிய வரும் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து தென்காசி காவல்நிலையம் 1 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். தென்காசி அரசு மருத்துவமனை 2 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான்.

தென்காசி அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமென்றால் தென்காசி காவல்நிலையத்தை தாண்டி செல்ல வேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திலிருந்து உடனடியாக தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். தங்கபாண்டியன் மருத்துவமனையிலிருந்து உடனடியாக நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் சுமார் 10 நிமிடத்தில் சென்றிருப்பேனா? என்றால் சென்றிருப்பேன். சம்பவம் நடப்பதற்கு முன்பு என்னுடைய நண்பர்கள் அந்த இடத்தில் எவ்வளவு நேரம் இருந்திருப்பார்கள் என்றால் ஒரு அரை மணிநேரம் இருந்திருப்பார்கள். என்னுடைய நண்பர்கள் அவர்களுடைய இருசக்கரவாகனத்தில்

தனித்தனியாக வந்திருப்பார்கள் என்றால் சரிதான். என்னுடைய நண்பர்கள் அவர்களுடைய இருசக்கரவாகனத்தில் என்னை தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்களா? என்றால் சரிதான்.

தங்கபாண்டியன் மருத்துவமனையிலிருந்து நான் ஆட்டோவில் சென்றேன். யாருடைய வாகனத்தில் நான் தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. தங்கபாண்டியன் மருத்துவமனை ஆட்டோ ஸ்டாண்டிலிருந்து ஆட்டோ பிடித்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்தேனா? என்றால் அது எனக்கு தெரியாது. 03.15 மணியளவில் தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்திருப்பேன் என்றால் சரிதான். தென்காசி அரசு மருத்துவமனை புறக்காவல் நிலைய போலீசாரிடம் நான் சம்பவத்தை பற்றி கூறினேனா? என்றால் இல்லை.

தென்காசி அரசு மருத்துவமனைக்கு நானும், என் நண்பர்கள் மணிகண்டனும், சுடலைமாணிக்கமும் சென்றோம். சம்பவம் குறித்து என்னுடைய அண்ணன் குமாருக்கு எங்கிருந்து தகவல் தெரிவித்தார்கள் என்றால் தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் தெரிவித்தார்கள். யார் தகவல் தெரிவித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. நான் தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவரிடம் நடந்த சம்பவத்தை கூறினேன் என்றால் நான் கூறவில்லை. யார் கூறினார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் மருத்துவரிடம் தெரியாத ஒரு நபர் தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தெரிந்த 4 பேர் தாக்கியதாக கூறியுள்ளேன்.

எந்த ஆயுதங்களால் தாக்கினார்கள் என்று கூறியுள்ளேன். செங்கல் வைத்து தாக்கியதாக கூறியுள்ளேன். தென்காசி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எவ்வளவு நேரம் எடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் சென்றேன். அப்போது என்னுடைய நண்பர்கள் உடன் வரவில்லை. நான் இந்த விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை.

தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் சம்பவத்தை கேட்டு எழுதிக்கொண்டார்களா? என்றால் இல்லை திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து எழுதிக்கொண்டார்கள். தென்காசி போலீசார் தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்தார்களா? என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. தென்காசி போலீசார் சம்பவத்திற்கு மறுநாள் வந்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதில் நானும், என் அண்ணனும் கையெழுத்து செய்தோம். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியும். நான் படித்து பார்த்தேன்.

நான் புகார் வாக்குமூலத்தில் பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ராஜ் மெஸ்ஸின் பின்புறமுள்ள எதிரி டேனியல் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சம்பவயிடத்தில் இருந்தவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். யாரென்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. என்னுடைய அண்ணன் சுப்பிரமணியன் 2 நாட்கள் கழித்து பார்த்தார். நான் அவரிடம் எதிரி பாபு கடன் கொடுத்த விபரம் கேட்டேனா? என்றால் இல்லை. அவரும் சொல்லவில்லை. அதற்கான தனிப்பட்ட காரணம்

இல்லை. 1ம் எதிரி பாபுவுக்கு என் அண்ணன் யாரென்று தெரியாது என்றால் சரியல்ல. என் அண்ணன் சுப்பிரமணியனுக்கு பாபு எந்த காலத்திலும் கடன் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் சுப்பிரமணியன் மீது பாபு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

என் அண்ணன் சுப்பிரமணியன் வந்து பார்த்த விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேன். என்னை ஆய்வாளர் என்றைய தேதியில் விசாரித்தார் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் விசாரித்தார். எத்தனை மணி என்று எனக்கு தெரியாது. என்னை தென்காசி காவல் ஆய்வாளர் பாலமுருகன் தான் விசாரித்தார் என்றால் சரிதான். வேறு எந்த ஆய்வாளரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். குமாரை யார் விசாரித்தார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய நண்பர்கள் 2 பேரும் சம்பவயிடத்திற்கு சேர்ந்து தான் வந்தார்கள்.

நான் சொன்ன நாள், நேரத்தில், சொன்ன இடத்தில் நண்பர்கள் வந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், சொன்னது பொய் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியதை தான் ஆய்வாளர் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரிக்கும் போது, என்னுடைய நண்பர் பெயரை சதீஷ் என்று மட்டும் தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சுடர் மாணிக்கம் என்பவரும் அல்லது சதீஷ் என்பவரும் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், குழப்பம் காரணமாகத் தான் நான் சதீஷ் என்ற சுடர்மாணிக்கம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய காயத்திலிருந்து இரத்தக்கசிவு வந்தது. சட்டையில் இரத்தம் பட்டது என்றால் சரியல்ல. இரத்தக்கசிவு தான் இருந்தது. நான் சட்டையை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை தடுக்க என்னுடைய நண்பர்கள் முயற்சி செய்தார்களா? என்றால் செய்தார்கள். அவர்களுக்கு காயம் பட்டதா? என்றால் இல்லை. தள்ளு முள்ளு நடந்தது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கியதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

காவல்துறையினர் புள்ளிவிபரக் கணக்கிற்காக எனக்கு ஏதோ ஒரு வகையில் ஏற்பட்ட காயத்திற்காக பொய்யாக காவல்துறையினரால் இந்த வழக்கு உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> -

எனக்கு தலையிலும், இடது தோள்பட்டையிலும் ஏற்பட்ட காயத்தை தவிர வேறு காயங்கள் இல்லை என்றால் சரிதான். தலையில் அடித்ததினால் ஸ்டோர்க் ஏற்பட்டுள்ளது. 2ம் எதிரி பிரவினை சம்பவத்திற்கு முன்னர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவயிடத்தின் முன்னால் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய நண்பர்கள் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார்கள்.

என்னுடைய நண்பர் மணிகண்டன் வழக்கறிஞர் என்றால் சரியல்ல. அவர் பகுதி நேர ஆசிரியராவார். 2ம் எதிரி சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

(1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் இந்து சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் சுப்பிரமணியன் நகர்மன்ற கவுன்சிலர் என்றால் சரிதான். நான் சிவபக்தர் என்றால் சரிதான். காசி விஸ்வநாதர் கோவிலில் கடை வைத்திருக்கும் மாற்று சமூகத்து நபர்களிடம் எனக்கு பிரச்சனை உள்ளது என்றால்சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில் மட்டும் தான் என் கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் படித்து பார்த்ததாக மேற்குறிப்பு இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்றால் சரியல்ல.

(1மற்றும் 2ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:21:32 +0530